இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர் :
ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை-34.

பெறுநர் : (மின்னஞ்சல் மூலம்)

1. அனைத்து இணை ஆணையர்கள்.
2. அனைத்து இணை ஆணையர்/செயல் அலுவலர்கள்.
3. அனைத்து துணை ஆணையர்/செயல் அலுவலர்கள்.
4. அனைத்து உதவி ஆணையர்கள்.
5. அனைத்து உதவி ஆணையர்/செயல் அலுவலர்கள்.

ந.க.எண். 36755/2020/யு4 நாள்:15.09.2021

பொருள்:- பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி - பசலி 1430 - கோவிட்-19 நோய் தொற்றின் காரணமாக பக்தர்களுக்கான தரிசனம் வார இறுதி நாட்கள் இரத்து செய்யப்பட்டது - பலவகை உரிம இனங்களுக்கு உரிம காலத்தை நீட்டித்தல் - மீதமுள்ள நாட்களுக்கு பசலி 1431-ற்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பை நடத்துதல் - நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தல் - தொடர்பாக.

பார்வை:- 1)இவ்வலுவலக ந.க.எண்.36755/2020/யு4 நாள்:26.07.2021.
2)G.O.(Ms).No.504 Revenue and disaster management (DM-IV) department dated.07.08.2021.
3)G.O.(Ms).No.541 Revenue and disaster management (DM-IV) department dated.31.08.2021.

-------

கோவிட்-19 நோய் தொற்றின் காரணமாக பார்வை 1-இல் காணும் குறிப்பின் படி பசலி 1430-ல் (01.07.2020 முதல் 30.06.2021 முடிய) 26.04.2021 முதல் திருக்கோயில்கள் பக்தர்களுக்கான தரிசனம் இரத்து செய்யப்பட்டு மூடப்பட்டதாலும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 63 நாட்களுக்கு பின்னர் 28.06.2021 முதல் திருக்கோயில்கள் திறக்கப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள திருக்கோயில்களில் பசலி 1430-ல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டு தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட பசலி தோறும் நடைபெறும் பலவகை உரிம இனங்களின் **(மேல் மகசூல் உரிமம் மற்றும் மீன்பாசி குத்தகை உரிம இனங்களைத் தவிர)** உரிமதாரர்களுக்கு இழப்பு ஏற்பட்ட 63 நாட்களுக்கு ஈடாக பசலி 1431ல் திருக்கோயில் நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் 63 நாட்களுக்கு காலநீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட நான்கு மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் 05.07.2021 முதல் திருக்கோயில்கள் திறக்கப்பட்டுள்ளதால், மற்ற மாவட்டங்களில் உள்ள திருக்கோயில்களில் பசலி 1430-ல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டு தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட பசலி தோறும் நடைபெறும் பலவகை உரிம இனங்களின் **(மேல் மகசூல் உரிமம் மற்றும் மீன்பாசி குத்தகை உரிம இனங்களைத் தவிர)** உரிமதாரர்களுக்கு இழப்பு ஏற்பட்ட 66 நாட்களுக்கு ஈடாக பசலி 1431ல் திருக்கோயில் நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் 66 நாட்களுக்கு காலநீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோவிட்-19 நோய் தொற்றின் காரணமாக பார்வை 2-இல் காணும் குறிப்பில் 09.08.2021 முதல் பொதுமக்கள் கூட்டம் சேருவதை தவிர்க்கும் பொருட்டு அனைத்து வழிபாட்டு தலங்களிலும் மற்றும் மதம் சார்ந்த இடங்களிலும் வார இறுதி நாட்களான வெள்ளி, சனி, மற்றும் ஞாயிறு ஆகிய நாட்கள் திருக்கோயில்கள் மூட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பார்வை 3-இல் காணும் குறிப்பில் இந்நிலையை 15.09.2021 காலை 06.00 மணி வரை தொடரவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நோய்த் தொற்று காரணமாக இந்த நிலை தொடருமா என கருத இயலாததால் கால நீட்டிப்பு செய்வது குறித்து காலம் வரையறுக்கப்பட இயலாத சூழ்நிலை உள்ளது.

எனவே பார்வை 1-இல் காணும் குறிப்பின் தொடர்ச்சியாக பசலி 1430-இல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டு தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட பசலி தோறும் நடைபெறும் பலவகை உரிம இனங்களின் **(மேல் மகசூல் உரிமம் மற்றும் மீன்பாசி குத்தகை உரிம இனங்களைத் தவிர)** உரிமதாரர்களுக்கு இழப்பு ஏற்படும் நாட்களை ஏற்கனவே பார்வை 2 மற்றும் 3-இல் காணும் குறிப்பில் வெளியிடப்பட்ட அரசாணை மற்றும் இனி வரும் காலங்களில் அரசால் வெளியிடப்படும் அரசாணையின் அடிப்படையில் கணக்கிட்டு அதற்கு ஈடாக பசலி 1431-இல் திருக்கோயில் நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் காலநீட்டிப்பு செய்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

மேலும், தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட இனங்களுக்கு மட்டும் காலநீட்டிப்பு வழங்கப்பட வேண்டும். தொகை முழுவதும் வசூல் செய்யப்படாத இனங்களுக்கு காலநீட்டிப்பு வழங்கப்பட்டால் ஏற்படும் இழப்பிற்கு தொடர்புடைய அலுவலரே பொறுப்பாக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உரிமதாரர்களுக்கு காலநீட்டிப்பு வழங்கப்பட்டு அதன் விவரத்துடன் உரிமதாரர்களின் கால நீட்டிப்பு கோரும் மனு, பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட இரசீது நகல் மற்றும் தக்கார்/அறங்காவலர் தீர்மானம் ஆகியவற்றுடன் ஆணையருக்கு விவரம் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உரிம இனங்களுக்கு கால நீட்டிப்பு வழங்கப்படும் நாட்கள் போக பசலி 1431-ல் மீதமுள்ள நாட்களுக்கு திருக்கோயிலுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும்

Verified @ RealEstate

பொருட்டு வழக்கமான பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு உட்பட்டும், கோவிட்–19 நோய் தொற்றின் காரணமாக ஊரடங்கு அமலில் உள்ளதால், அந்த மாவட்டத்தின் நெறிமுறைகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற்றுக் கொண்டும் உடன் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பிற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவும், கால நீட்டிப்பு வழங்கப்படும் காலம் முடிந்த மறுநாள் முதலே பசலி 1431–ற்கு அந்தந்த உரிமங்களுக்கு அங்கீகரிக்கப்படும் புதிய உரிமதாரர், உரிமம் ஏற்க தவறாது ஆவன செய்யும் வகையில் உரிய அங்கீகாரம் முன்கூட்டியே பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

(ஓம்).ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

//உண்மை நகல் உத்திரவின்படி//

16.09.2021.
கண்காணிப்பாளர்

நகல்.

6) அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
7) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
8) இவ்வலுவலக 'எச்' மற்றும் 'இசட்' பிரிவு (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ) (எண்ணிடல் மூலம்)
9) உபரி.

Verified @ RealEstate